## இராணுவ கவசவண்டி சிதைக்கப்பட்டது

6.8.84

1984 ஆகஸ்ட் 6ந் திகதியன்று யாழ்ப்பாண பிரதான ஆஸ்பத்திரிக்கு அண்மையில் கவசவண்டியை வைத்து கட்டிடங்களைச் சுட்டு சேதப்படுத்திக் கொண்டிருந்த சிங்கள படை வீரர்களுக்கு எதிராக எமது கெரில்லா வீரர்கள் செயற்பட்டனர். யாழ் நகரின் முக்கிய சந்தியில் கைக்குண்டுகளை வீசி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவக் கவசவண்டி ஒன்று சிதைக்கப்பட்டதுடன் ஓர் இராணுவ அதிகாரி அந்த இடத்திலேயே மரணமானார். மற்றும் இரண்டு இராணுவக் கூலிப் படையினர் படுகாயமுற்றனர்.

அதே தினத்தன்று வல்வெட்டித்துறையில் கெருடாவில் என்ற கிராமத்தில் எமது கெரில்லா வீரர் ஒருவர் இராணுவப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டார். தனி ஒருவராக நின்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஓர் இராணுவக் கூலி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் மற்ற இரண்டு இராணுவக் கூலிகளும் காயத்துடன் தப்பி ஓடிவிட்டனர்.